சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.426/2024 நாள்- 21.11.2025

<u>வா.சா.1. தங்கதுரை</u>

<u>குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்</u>

வழக்கில் கண்ட சர்வே எண்ணின் மூலசர்வே எண் 14/2 பி , 13/2 பி ஆகும். 14/2 பி என்ன பட்டா நம்பரில் யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா எண்.188, பிள்ளையார் நாடார் பெயரில் இருந்தது. 13/2 பி என்ன பட்டா நம்பரில் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 14/2 பி- பட்டா இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி வழங்கப்பட்டது என்றால் யூடிஆர்- க்கு முன்பாக வழங்கப்பட்டது. சர்வே எண்.14/2 பி நல்லமங்கலம் கிராமத்தின் தற்போதைய சர்வே எண்.80/2 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் பதிவேட்டு நகல் சர்வே எண்.14/2 பிக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பதிவேட்டு நகல் 116/4 எ (Pt) என்ற சொத்து 13/3, 13/7 என்றும் 13/4 எ, 2 பி தற்போதைய சர்வே எண்.71/15 என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். செட்டில்மெண்ட் பதிவேட்டு நகல் 1961ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொத்துக்களை வாங்கிய காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்று கேட்டால் காளியம்மாள் மற்றும் பஞ்சாங்க நாடார் பெயரில் கூட்டுப் பட்டாவாக பட்டா எண்.547-ல் இருந்தது. பட்டா எண்.547-ல் இருந்து தான் என் பெயருக்கு பட்டா மாறியது. வா.சாஆ.11- தான் என் பெயருக்கு பட்டா மாறிய உத்தரவு என்றால் சரிதான். அது கிணற்று பாசனம் பிரிவினையில்லாதது மற்றும் எனக்கு இடமும் உள்ளது. வா.சா.ஆ.11 பட்டா எண்.249 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் தற்போதைய எண் காட்டப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் உத்தரவிற்கு முன்பாக விழுதுபெருமாள் நாடார் மகன் பிள்ளையார் நாடாருக்கோ அவரது வாரிசுகளுக்கோ அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்று தெரியுமா என்றால் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத நபர் என்பதால் அறிவிப்பு அனுப்பியிருக்க மாட்டார்கள். விழுதுபெருமாள் நாடார் மகன் பிள்ளையார் நாடார் மற்றும் அவரது வாரிசுகள் சம்பந்தமில்லாத நபர்கள் என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் 1943 வருட பத்திரத்தில் கண்ட சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லாதது என்பதால் கூறுகிறேன். வா.சா.ஆ.09. ல் பட்டா எண்.547 யார் பெயரில் இருந்தது என்று கேட்டால் பாலகிருஷ்ணன், காளியம்மாள், சிவனாண்டி ஆகிய மூன்று பேருக்கு உள்ளதாக காட்டப்பட்டுள்ளது. அதன் சர்வே எண்.80/ 2 எப் என்று பட்டா எண்.547-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரிமுத்து நாடார் மகன் சிவனாண்டி நாடாரிடமிருந்து சொத்து எதுவும் வாங்கவில்லை பொதுபாதைக்காக பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது. பொதுபாதை சொத்திற்கு தென்பக்கம் 10 அடி அகலத்தில் உள்ளது.

அதன் நீளம் சுமார் ரோட்டிலிருந்து 250 அடி தூரம் இருக்கும். மேற்படி புத்தூர் ரோடு சொத்திற்கு மேல்புறம் அமைந்துள்ளதா என்று கேட்டால் என் சொத்திலிருந்து 4 சொத்திற்கு அப்பால் இருக்கிறது. பட்டா மாறுதல் உத்தரவு சம்பந்தமாக சொத்தின் உரிமையாளர்களாக காட்டப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. பட்டா வாங்கிய இடங்களுக்கு நான் தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 – மனு கொடுக்க வேண்டிய அவசிய காரணம் என்ன என்று கேட்டால் பிரதிவாதி கேவியட் மனு தாக்கல் செய்ததால் ஆட்சேபணை மனு கொடுத்தேன். வா.சா.ஆ.11 ஆட்சேபணை மனு கொடுத்த காலத்தில் யார் பெயருக்கு பட்டா இருந்தது என்று கேட்டால் என்னுடைய பெயரில் தான் இருந்தது. வா.சா.ஆ.11 – கொடுத்த இரண்டு வார காலத்திற்குள் மாவட்ட வருவாய் அலுவலருக்கு வா.சா.ஆ.10-ன் படி ஆட்சேபணை தெரிவித்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.11- கொடுத்த பின்பு ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்று கேட்டால் உத்தரவு பிறக்கவில்லை ஆய்வு செய்ய வேண்டும் என்று எனக்கு தபால் வந்தது. அந்த உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10, 11- ல் என்னுடைய பட்டா எண் குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆட்சேபணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் எதன் அடிப்படையில் சொத்தில் உரிமை கோருகிறார்கள் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆட்சேபணை மனுக்களுக்கு பிறகு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்று கேட்டால் அனுப்பினேன். அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.17- அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.17-ல் சர்வே எண்.80/2, 71/16 சொத்துக்கள் விழுதுபெருமாள் நாடாருக்கு பாத்தியப்பட்டு பிள்ளையார் நாடார் பெயரில் யூடிஆர்க்கு முன்பு பட்டா எண்.188 ஏற்பட்டு பிள்ளையார் நாடார் வாரிசுகளால் அனுபவித்து வரப்படுகிறது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணங்கள் விழுதுபெருமாள் நாடாரின் பேரன்களிடமிருந்து நேரடியாக நான் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். முறைப்படியான முன் உரிமையாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளிடமிருந்து கிரையம் பெறவில்லை என்பதாலும், பட்டா மாறுதல் முறைப்படியான முன் உரிமையாளர்களை விசாரணை செய்யாமல் பெறப்பட்டது என்பதால் தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.